**செய்தி வெளியீடு எண்: 651** **நாள்: 03.10.2017**

# தமிழ் வளர்ச்சித் துறை

## செய்தி வெளியீடு

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழ்நாடு முழுவதும் தமிழ்நாடு அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் தமிழ் வளர்ச்சித் துறையின் தமிழ் மன்றம் சார்பில் மாநிலம் முழுவதும் 06.10.2017 ஆம் நாளன்று 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பயிலும் பள்ளி தலைமையாசிரியரிடம் உரிய படிவத்தில் பரிந்துரையை பெற்று போட்டி நாளன்று மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை/உதவி இயக்குநர்களிடம் நேரில் அளிக்க வேண்டும். போட்டி விதிமுறைகள், விண்ணப்பப் படிவம் தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.org என்ற வலைத்தளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். போட்டிக்கான தலைப்புகள் போட்டி தொடங்கும்போது அறிவிக்கப்பெறும். போட்டி முடிவுகள் அன்றே அறிவிக்கப்பெறும்.

ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 10,000/–மும், இரண்டாம் பரிசாக ரூபாய் 7000/–மும், மூன்றாம் பரிசாக ரூபாய் 5000/–மும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**